**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 379/2012**

**நாள்.28.04.2026**

**வா.சா. 1- ராமலட்சுமி**

**5,7,9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா பெயருக்கு பட்டா மாற்றுவதற்காக வழக்குப் போட்டுள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் முத்தையா தலைவர். முத்தையா தலைவருக்கு எவ்வளவு இடம் பாத்தியம் என்றால் 52 சென்ட். முத்தையா தலைவருக்கு 52 சென்ட் பாத்தியம் என்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்குச் சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. வழக்குச் சொத்தின் நான்கு பக்க எல்லை என்ன என்றால் கிழக்கு பெரியபாண்டி தேவர் புஞ்சை, மேற்கு வீரபுலிபாண்டி, சீனித்தாய் புஞ்சை, வடக்கு சின்னத்தாய் புஞ்சை, தெற்கு களஞ்சியம், மணி புஞ்சை. முத்தையா தலைவருக்கு திருமணம் முடிந்துவிட்டதா, அவருக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் தெரியாது. என் அப்பா பெயர் என்ன என்றால் மாரிராஜா தேவர். என் அப்பாவின் மாமா தான் முத்தையா தலைவர் என்றால் சரிதான். முத்தையா தலைவர் என் அப்பாவுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் அதை அடிப்படையாக வைத்து தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். முத்தையா தலைவர் எந்த உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை அவருக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளது நாங்கள் மோசடியாக அவர் பெயரில் உயில் ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு ஏற்கனவே தள்ளுபடியாகி, மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அங்கு பிரதிவாதிகள் தரப்பில் வாரிசுகளை சேர்க்கவில்லை என மனு கொடுத்ததன் பேரில் இந்த வழக்கு திருப்பப்பட்டது என்றால் தெரியாது. இந்த வழக்கு ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது என் அப்பா பெயருக்கு முத்தையா தலைவர் பிறப்பித்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை தற்போது தான் தாக்கல் செய்கிறேன் என்றால் தெரியவில்லை. என் அப்பா பெயருக்கு முத்தையா தலைவர் பிறப்பித்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தான் உள்ளது.

**5, 7, 9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.28 17:41:30 +0530